





We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)

## OCTOBER

*We Are Here..!! To Guide You..!!*








# We Shine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## அக்டோபர் - 30.10.2018


We Shine Academy™
guiding you to get through

Main Office @

**Weshine Study Circle**
Chromepet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**Weshine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, Gokul Arcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu – 600 020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்

- இந்திய நிகழ்வுகள்
- உலக நிகழ்வுகள்
- விளையாட்டு நிகழ்வுகள்
- விருதுகள்
- முக்கிய தினங்கள்





BIOFACH

into organic





# இந்திய நிகழ்வுகள்

- **இந்தியா - ஜப்பான்** இடையிலான 13-ஆவது வருடாந்திர மாநாடு டோக்கியோவில் நடைபெற்றது.
  - இதில் இரு நாடுகளின் வெளியுறவுத் துறை பாதுகாப்பு அமைச்சர்கள் **(2 பிளஸ் 2)** சந்தித்துப் பேச்சு வார்த்தை நடத்தினர். இந்த சந்திப்பில் **மின்னணுத் துறையில் ஒத்துழைப்பு, இணைய தளப் பாதுகாப்பு, சுகாதாரப் பாதுகாப்பு, கடல்சார் பாதுகாப்பு, விண்வெளித்துறையில் ஒத்துழைப்பு, அதிவிரைவு ரயில் திட்டம்** உள்ளிட்டவை தொடர்பான 6 முக்கிய ஒப்பந்தங்கள் கையெழுத்தாயின.

- செயற்கை நுண்ணறிவுத் தொழில்நுட்பங்களில் மிகவும் மேம்பட்ட நாடுகளின் பட்டியலில் இந்தியா இடம் பெற்றிருப்பதாக **பின்லாந்தைச்** சேர்ந்த செயற்கை நுண்ணறிவு நிறுவனம் **லை.ஃ.ப்ரா** தெரிவித்திருக்கிறது. இந்த நிறுவனம் நடத்திய ஆய்வில் செயற்கை நுண்ணறிவுப் பட்டியலில் **அமெரிக்கா முதலிடத்திலும் சீனா இரண்டாவது** இடத்திலும் **இந்தியா 13** வது இடத்திலும் இருக்கின்றன.

- இந்தியாவில் 3 நாள் நடைபெறும், இயற்கை விவசாயத் துறையின் மிகப்பெரிய கண்காட்சியான **BIOFACH -இன் 10** வது பதிப்பை மத்திய அமைச்சர் சுரேஷ்பிரபு புதுடெல்லியில் தொடங்கி வைத்தார்.
  - **நியூரன்பர்க்மெஸ்ஸி இந்தியா (NuernbergMesse India)** வர்த்தக மற்றும் தொழில்துறை அமைச்சகத்தின் வேளாண் மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்கள் ஏற்றுமதி மேம்பாட்டு ஆணையம். **(APEDA- Agricultural and Processed Food Products Export Development Authority).**
  - **BIOFACH India** மாநாட்டின் கருத்துரு: இந்தியாவில் இருந்து இயற்கை விவசாயப் பொருட்களின் உற்பத்தியை எற்றுமதி செய்வதற்கான உத்திகள் மற்றும் ஒருங்கிணைப்பு ஆகியவற்றை அதிகப்படுத்துவது. **(Enhancing export of**

organic products trade from India - Strategies and synergies)

## உலக நிகழ்வுகள்

- பருவநிலை மாற்றத்தைக் கண்காணித்து, அதனால் ஏற்படக் கூடிய ஆபத்துகள் குறித்து ஆய்வு செய்வதற்காக, பிரான்ஸின் உதவியுடன் சீன விண்வெளி ஆய்வு அமைப்பு முதல் முறையாக உருவாக்கியுள்ள செயற்கைக்கோளை, ஏந்திச் செல்லக்கூடிய சீனாவின் **லாங்க் மார்ச் 2சி ராக்கெட்டானது (Long March 2C) கோபி** பாலைவனத்திலுள்ள ஜியூகான் ஏவுதளத்திலிருந்து **(Jiuquan Satellite Launch Center)** விண்ணில் ஏவப்பட்டது.

- இலங்கை அதிபர் மைத்ரிபால சிறிசேனவின் கட்சி, கூட்டணியை விட்டு விலகியதால், புதிய பிரதமராக மகிந்த ராஜபக்ச பதவியேற்றார்.

○ **சீனாவின் உதவியுடன் 2022** ஆம் ஆண்டில் முதல் முறையாக மனிதரை விண்வெளிக்கு அனுப்பப் போவதாக பாகிஸ்தான் அறிவித்துள்ளது.
  - இதற்காக பாகிஸ்தான் விண்வெளி மற்றும் புற வளிமண்டல ஆய்வு ஆணையம் **(Space and upper atmosphere research commission)** மற்றும் **சீனா** இடையே ஒப்பந்தம் கையெழுத்திடப்பட்டுள்ளது.

## விளையாட்டு நிகழ்வுகள்

- **பேஸலில் நடைபெற்ற சுவிஸ் உள்ளரங்க (Swiss Indoor at Basel)** டென்னிஸ் இறுதி ஆட்டத்தில் வென்றதின் மூலம், **ரோஜர் பெடரர்** தனது **99- ஆவது ஏடிபி** சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளார்.
  - ○ பெடரர், ருமோனிய வீரர் **மாரியஸ் காப்பிலை (Marius Copil)** 7-6, 6-4 என்ற நேர் செட்களில் வீழ்த்தி பட்டம் வென்றார்.


We Shine Academy TM

சொந்த மண்ணில் அவர் வெல்லும் 99-வது ஏடிபி சாம்பியன் பட்டமாகும்.

## விருதுகள்

- 2018 ஆம் ஆண்டிற்கான **ஐ.நா. மனித உரிமை விருதுகளின் (UN Human Right Prize)** வெற்றியாளர்களை ஐக்கிய நாடுகள் சபை அறிவித்துள்ளது.
    - 2018 ஆம் ஆண்டு டிசம்பர் 10 (மனித உரிமைகள் தினம்) அன்று அமெரிக்காவின் நியூயார்க்கில் அமைந்துள்ள ஐ.நா. தலைமையகத்தில் நடைபெறும் விருது வழங்கும் விழாவில் வெற்றி பெற்றவர்களுக்கு இவ்விருது வழங்கப்படவிருக்கிறது.
    - **ஆஸ்மா ஜஹாங்கீர் (Asma Jahangir)** - பாகிஸ்தானின் மறைந்த மனித உரிமை ஆர்வலர்.
    - **ரெபகா கியூமி (Rebeca Gyumi)** - தான்சானிய மனித உரிமை ஆர்வலர்
    - **ஜியோனியா வபிசானா(Joenia Wapichana)** - பிரேசிலின் முதலாவது உள்நாட்டு வழக்குரைஞர்
    - **பிரெண்ட்லைன் டிபெண்டர்ஸ் (Front line Defenders)** - அயர்லாந்தின் மனித உரிமைகள் அமைப்பு.
- குறிப்பு
    - 1966 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் பொதுச் சபையால் இவ்விருதுகள் உருவாக்கப்பட்டன.
    - இவ்விருதுகள் முதன்முறையாக **1968 ஆம்** ஆண்டில் வழங்கப்பட்டன. அன்று முதல் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை இவ்விருதுகள் வழங்கப்படுகின்றன.

## முக்கிய தினங்கள்

- **உலக சேமிப்பு தினம் - அக்டோபர் 30**
    - இந்த உலக சேமிப்பு தினமானது 1924 ஆண்டு முதல் கடைபிடிக்கப்படுகிறது.
    - **Theme : Share your Dreams.**



We Shine Academy